மேல் மாகாணத்திலுள்ள சிறுவர் நலன் அபிவிருத்தி நிலையங்களிலுள்ள சிறுவர்கள் மற்றும் பால்ய தாய்மார்கள் என்போரின் நன்மைக்கான உரிய அரசாங்க நிறுவனங்களின் நடவடிக்கைகள் மீதான செயலாற்றல் கணக்காய்வு அறிக்கை 2011



**செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வு பிரிவு**

**கணக்காய்வு அறிக்கை இல:**

**வைஎஸ்/பிஏ/சீசீடிசீஎஸ்/2011/01**

# 2014

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

இலங்கையில் சிறுவர் விவகாரங்களிற்குப் பொறுப்பான பிரதான நிறுவனம் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சாகும். நிறுவன மயப்படுத்தப்பட்ட சிறுவர்கள் மற்றும் பொதுவாக சகல சிறுவர்களினதும் நன்மைக்காக இந்த அமைச்சின் கீழ் உள்ள சட்ட பூர்வமான தாபனங்கள் கருமங்களை செயலாற்றுகின்றன. நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களின் நலன்புரி அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பிற்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதிகளின் பயன்பாட்டின் சிக்கனத்தன்மை, வினைத்திறன் மற்றும் பயனுறுதி என்பவற்றை மதிப்பிடுதல் அதே போல் அத்தகைய சிறுவர்களின் சமூகமயமாக்கலுடனான செயன்முறை மூலம் உருவாக்கப்பட்ட சமூகப் பின்விளைவின் அளவை மதிப்பீடு செய்தல் என்பன கணக்காய்வின் குறிக்கோளாகும். எமது செயலாற்றல் கணக்காய்வின் நோக்கெல்லை கணக்காய்விற்குத் கிடைக்கத்தக்க பதவியணி ஏனைய வளங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட காலம் என்பவற்றின் வரையறை காரணமாக மேல் மாகாணத்திலுள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகள் திணைக்களத்தின் நிறுவனங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதாகும். அரசாங்கம் மற்றும் தன்னார்வ சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலுள்ள சிறுவர்களின் சுகாதார நிலைமைகளை முன்னேற்றுவதற்காக எடுக்கப்பட்ட நலன்புரி படிமுறைகள் திருப்திகரமாக இருந்த அதே சமயம் சிலவற்றில் சமனான உணவுகள், மருத்துவ வசதிகள், வைத்திய சிகிச்சை சேவைகள் மற்றும் சீடிசீக்களிலுள்ள குழந்தைகளிற்கு தடுப்பு மருந்துகள் வழங்கல் என்பன திருப்திகரமாக இருந்தன என்று எமது மாதிரி அடிப்படை கணக்காய்வின் போது நாம் அவதானித்தோம்.

நீதிமன்ற கட்டளைகள் மூலம் வழிகாட்டப்பட்ட சிறுவர்களின் கல்வி, சான்றழிக்கப்பட்ட இரண்டு பாடசாலைகள் மூலம் வழங்கப்படுகின்றது. எனினும், சீடிசீக்கள் மற்றும் வழங்கப்பட்ட கல்வி வசதிகள் திருப்திகரமான மட்டத்திலிருக்கவில்லை. அத்துடன் தொழிற்பயிற்சி கல்வியும் நியமதரத்திலிருக்கவில்லை.

காவல் மற்றும் பாதுகாப்புத் தேவைப்படும் அதிகமான ஆதரவற்ற சிறுவர்கள் பொருத்தமான சீடிசீகளிற்கு தொடர்புபடுத்தப்படுவதற்குப் பதிலாக தடுப்புக்காவல் இல்லங்களிற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். நன்னடத்தை அலுவலகர்கள் அவர்கள் ஒழுங்காக வருகைதர வேண்டுமென்று வேண்டப்பட்ட போதிலும் திருப்திகரமான மட்டத்தில் இந்த நிறுவனங்களிற்கு வருவதில்லை. போதிய பதவியணியினர் மற்றும் போதிய பாதுகாப்பு ஒழுங்குகளின்மை காரணமாகவும சிறுவர்களிற்கு சிறந்த ஆதரவை வழங்குவதற்கான ஓர் முறையான சுற்றாடல் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறுவர்களை தத்தெடுப்பதற்கான பாரிய கேள்வி இருந்த போதிலும், சுவீகாரம் செய்யும் செயன்முறையிலான தாமதம் காரணமாக நீண்டகாலமாக பெரும் எண்ணிக்கையான குழந்தைகள் இல்லங்களில் இருக்கின்றன.

அதிகாரிகள், சிறுவர்களிற்கு சிறந்த பாடசாலை வசதிகள் மற்றும் தொழிசார் கல்வி மற்றும் பயிற்சி வழங்குவதிலும் அதே போல் அவர்களின் துரதிஷ்ட

சூழ்நிலைகளிலிருந்து விலகிச் செல்வதை நோக்காகக் கொண்ட சிறந்த மற்றும் தாக்கமான சமூகமய நிகழ்ச்சித் திட்டங்களையும் வழங்குவதற்கு கூடிய கவனம் செலுத்த வேண்டும். சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் சிறந்த மற்றும் தாக்கமான சமூகமய நிகழ்ச்சித்திட்டங்களை சிறுவர்களிற்கு வழங்கும் நோக்குடன் இந்த நிறுவனங்களின் பௌதீக வளங்களைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால் அவர்கள் இந்த நாட்டின் எதிர்கால சந்ததியின் பங்குபற்றும் உறுப்பினர்களாக வருவதை அபிவிருத்தி செய்கின்றதில் அவ்விளைவை ஏற்படுத்தியிருக்கும்.

## 2. முகவுரை

### 2.1 நிறுவனங்களின் கட்டமைப்பு

2005 ஆம் ஆண்டின் இறுதியில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் வலுவூட்டல் அமைச்சு நிறுவப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டில் அமைச்சரவை மாற்றத்துடன் மீள அது சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சாக அமைக்கப்பட்டது. இந்த அமைச்சின் பிரதான நோக்கெல்லை சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அபிவிருத்தி என்ற இரண்டு பாரிய பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, சிறுவர் செயலகம் மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகள் திணைக்களம் என்பன சிறுவர் அபிவிருத்திக்குப் பொறுப்பானவைகளாகும். அமைச்சு அதன் நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகளின் போது நிறுவனங்களுடாக மகளிர் மற்றும் சிறுவர்கள் உரிமைகளை உறுதிப்படுத்தல்கள் மாகாண மட்டத்தில் திறன் அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் என்றவாறான பல எண்ணிக்கையான நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்காக அமைச்சிற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.2 பின்னணி

டிபீசீஎஸ் ஆனது நாடெங்கிலும் நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகளை வழங்கும் அரசாங்க நிறுவனமாகும். அது நன்னடத்தை அலுவலர்களின் சிபார்சின் பெயரில் அனாதைகளான கைவிடப்பட்ட ஆதரவற்ற மற்றும் துஷ்பிரயோகத்திற்கான சிறுவர்கள் மற்றும் இளம்பருவ குற்றவாளிகள் என்போர் தேசிய மற்றும் தன்னார்வ நிலையங்களிற்கு அனுமதிப்பதற்கான அவசிய ஒழுங்குகளை மேற்கொள்கிறது. 2009 ஆம் ஆண்டின் புள்ளி விபர அறிக்கையின் படி, 14,842 சிறுவர்கள் 354 சிறுவர் இல்லங்களில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அரசாங்கங்கள் 27 அரச இல்லங்களிற்கு வசதிகளை வழங்குகின்றது. மிகுதியான 327 வீசீடிசீக்கள் அரசாங்க நன்னடத்தை அலுவலர்களின் மேற்பார்வையின் கீழுள்ளன.

**டிபீசீஎஸ் இன் குறிக்கோள்கள் பின்வருமாறு:**

- பராயமடையாதோர், இளைஞர் மற்றும் வயதான குற்றவாளிகள் என்போர் புனர்வாழ்வு செயன்முறையூடாக சமூகமயப்படுத்தல்
- அனாதைகளான கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற சிறுவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுத்தல்
- சட்ட விடயங்களிற்கு உள்ளடக்கப்பட்ட சிறுவர்களின் உரிமைகளை உறுதி செய்தல்
- சிறுவர் உரிமைகளை மேம்படுத்துவதற்கான படிமுறைகளை எடுத்தல்

## 2.3 பிரதான செயற்பணிகள்

திணைக்களத்தின் பிரதான செயற்பணிகள் பின்வருமாறு

அ. நன்னடத்தை செயற்பணிகள்

ஆ. சிறுவர் நலன் பேணும் செயற்பணிகள்

நன்னடத்தைச் செயற்பணிகளின் கீழ் நீதிமன்றங்களால் குற்றவாளிகளாக தீர்மானிக்கப்பட்ட சிறுவர்களிற்கு புனர்வாழ்வழித்தல் மற்றும் சிறுவர் நலன் செயற்பணிகளின் கீழ், சிறுவர் சாசனத்தின் படியான சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தலால் உறுதிப்படுத்துவதற்கான பல்வகை விசேட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் என்பனவாகும்.

குற்றவாளிகளிற்குப் புனர்வாழ்வளிக்கும் நோக்கில் ஒரு பரிசோதனை நடைமுறையாக 1930 ஆம் ஆண்டில் இலங்கையின் நீதித்துறைக்கு நன்னடத்தை நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நடைமுறை 1944 இல் அனுமதிக்கப்பட்ட 22 ஆம் இலக்க நன்னடத்தை கட்டளைச் சட்டத்தினூடாக உருவாக்கப்பட்டது.

சிறுவர் மற்றும் இளைஞர் கடடளைச் சட்டத்தின் அமுலாக்கலுடன் 1944 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சகல நீதி வலயங்களையும் சிறுவர் நீதிமன்றத்தையும் உள்ளடக்கியதாக தற்போதுள்ள நன்னடத்தை சேவைகள் விரிவாக்கப்பட்ட அதே சமயம் இந்த விடயத்திற்குப் பொறுப்பான திணைக்களமாக டிபீசீஎஸ் 1956 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

1987 ஆம் ஆண்டில் அரசியல் யாப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தம் சட்டமாக்கப்பட்டதுடன் நன்னடத்தை சேவை மாகாண சபைகளின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதன் கீழ் மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டனர். நீதி வலைய மட்டத்தில் 09 மாகாண திணைக்களங்களும் 60 நன்னடத்தை அலுவலகங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

மேல் மாகாணத்திலுள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகள் மாகாண திணைக்களம் 05 அரசாங்க இல்லங்களையும் 93 வீசீடிசீ களையும் கொண்டுள்ளது. மேலும், இரன்முத்துக்கல மற்றும் மாக்கொலவில் முறையே சிறுமிகளுக்கும் ஆண் சிறுவர்களிற்காகவும் இரண்டு தடுப்புகாவல் இல்லங்களும் இரண்டு சான்றளிக்கப்பட்ட பாடசாலைகளும் தாபிக்கப்பட்டுள்ளதுடன் பாணந்துறையில் பிரஜாபதி இல்லம் சிறுவர்களும் பொறுப்பேற்கும் இல்லமாக செயற்படுகின்றது. 2009 ஆம் ஆண்டில் அரசாங்க இல்லங்கள் மற்றும் வீசீடிகளிற்கு அனுமதிக்கப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை முறையே 249 மற்றும் 3,689 ஆக இருந்தன. மேல் மாகாணங்களின் மூன்று மாவட்டங்களிலும் 27 பதிவு செய்யப்படாத இல்லங்களும் உள்ளன.

## 2.4 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் இந்தக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 2.5 கணக்காய்விற்கான தேவை மற்றும் தலைப்பைத் தெரிவு செய்த காரணங்கள்

இன்று இலங்கையில் உள்ள சிறுவர்களிற்கு விளைந்துள்ள சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர்கள் கைவிடப்படுதல் என்பன பிரதான தேசிய பிரச்சனைகளாகும். பொது மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் அக்கறையையும் ஏற்படுத்தும் வகையில் அச்சு மற்றும் இலத்திரணியல் ஊடகங்கள் இரண்டிலும் சிறுவர் துஷ்பிரயோக குறைபாடுகள் அடிக்கடி அறிக்கையிடப்படுகின்றன. சில இல்லங்களில் சிறுவர்கள் நன்கு பாதுகாக்கப்படாமலும் கவனமெடுக்கப்படாதும் இருப்பதன் காரணமாக அந்தச் சூழ்நிலையில் பாரிய குற்றவாளிகளாவதற்கு இடமுள்ளது. அத்தகைய சிறுவர்களைப் பாதுகாப்பதற்கும் துரதிஷ்ட நிலைமையிலிருந்து மீட்பதற்கும் எதிர் காலத்தில் அவர்கள் நல்ல பிரசைகளாக வருவதற்கும் அரசாங்கம் பல படிமுறைகளை எடுத்துள்ளது.

## 2.6 கணக்காய்வு குறிக்கோள்

அனாதைகளான, அனாதைகளான ஆதரவற்ற ஆதரவற்ற, கைவிடப்பட்ட சிறுவர்களின் நலன்களிற்காக செயற்படும் அரச நிறுவனங்களின் செயற்பாடுகளும் செயலாற்றல் தொடர்பாக பரிசீலித்தது. அச்சிறுவர்களுக்கு தேவப்பட்ட வசதிகள் வழங்கப்படுகையிலும் அவர்கள் நாட்டின் நற் பிரஜைகளாகுகையில் அத்தகைய நிறுவனத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் வெற்றியை உறுதிப்படுத்திக்கொள்ளப்படுவதே இக் கணக்காய்வின் குறிக்கோள்களாகும்.

## 2.7 கணக்காய்வின் நோக்கெல்லை.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதுடனஎமக்குத் தேவையெனக் கருதும் பரிசீலனைகளும் இதில் உள்ளடக்கப்பட்டது. டிபீசீசீஎஸ் இன் தொழிற்பாடுகளிலும் அதன் உள்ளக கட்டுப்பாடு நடைமுறைகளிலும் (குறித்த குறிக்கோள்களை எய்துவதற்குள்ள தாக்கங்களை நிச்சயிக்கும் அடிப்படையாகப் பயன்படுத்துவதற்கு தேவையானவர்களிற்கு) இனங்காணப்பட்ட நோக்கங்களை எய்தி தொடர்புபட்ட இடர் தொர்பான தேவையான அறிவை நாம் பெற்றுக்கொண்டதுடன் எமது செயலாற்றல் கணக்காய்வின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் சிபார்சுகள் தொடர்பான முடிவுகளுக்கு வந்துள்ளோம்.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

(அ) அதில் நியாயமான முடிவுகளை நாங்கள் எடுப்பதற்கு இயலுமானதெனவும் போதியதெனவும் நாங்கள் கருதிய உரிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கு எம்மால் எதிர்பார்க்கப்பட்டது. டிபீசீஎஸ் குறிக்கோள்களை அடைவதற்கு தடையாக உள்ள இடர்களைத் தடுத்தல் மற்றும் தொடர்புபட்ட நடவடிக்கைகள் தொடர்பாக எமது மதிப்பீட்டின் எங்கள் நடைமுறைகளின் தன்மை மற்றும் பரப்பளவு வேறுபட்டன. கண்டுபிடிப்புக்கள் மற்றும் சிபார்சுகளிற்கு ஆதாரமான சான்றுகளின் பரிசீலனைகளையும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(ஆ) எங்கள் கணக்காய்வு நோக்கெல்லை மேல்மாகாணத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டதுடன் இச்செயற்பாடு முன்னரே திட்டமிடப்பட்ட கணக்காய்வுத் திட்டத்திற்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தும் செயலாற்றல் கணக்காய்வின் போதான எமது காண்புகளின் அடிப்படையில் இது வேறுபட்டுள்ளது. அதன் பிரகாரம் எமது கணக்காய்வு நோக்கெல்லை விசேட விடயங்களில் எமது நோக்கத்தையும் சந்தர்ப்பங்கின் அடிப்படையில் வேறுபட்டுள்ளது.

(இ) 2010 ஆம் ஆண்டில் மேல் மாகாணத்தில் 02 சான்றளிக்கப்பட்ட பாடசாலைகள் 02 தடுப்புக் காவல் இல்லங்கள், 01 பொறுப்பேற்கும் இல்லம் மற்றும் 93 பதிவு செய்யப்பட்ட மற்றும் 27 பதிவுசெய்யப்படாத சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் இருந்தன. எமது செயலாற்றல் கணக்காய்வு மேல்மாகாணத்திலுள்ள 02 சான்றளிக்கப்பட்ட பாடசாலைகள், 02 தடுப்புக்காவல் இல்லங்கள், 01 சிறுவர் பொறுப்பேற்கும் இல்லம் மற்றும் 11 பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் மற்றும் 01 பதிவு செய்யப்படாத 01 இல்லமும் உள்ளடக்கியிருந்தது.

## 2.8 வரையறைகள், அருமையான விலகுதல் மற்றும் நிவாரணமளித்தல்

செயலாற்றல் கணக்காய்வின் அளவு, காலம் மற்றும் செயற்பாட்டிற்காக பெறப்படக்கூடிய மனித வளங்களைச் சார்ந்த தெரிவுக் கணக்காய்விற்கு மற்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. எங்களால் செவ்வி காணப்பட்ட சிறுவர்களிடமிருந்து சரியான தகவல்களைப் பெறுவதில் சிரமங்கள் நிலவின.

# 3. கணக்காய்வு காண்புகள், சிபார்சுகள் மற்றும் முகவர் நிலைய பதில்

## 3.1 சுகாதார வசதிகள்

(அ) நுகேகொடை சீடிசீயிலுள்ள 0-5 வயதளவிலான வயதெல்லையிலுள்ள 15 சிறுவர்களிற்கு 6 சிறுவர்கள் ஆபத்தான நோய்களிற்கெதிரான பாதுகாப்பிற்காக குறித்த காலதில் தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டிருக்காமை எம்மால் கண்டறியப்பட்டது. அச் சீடிசீ இல் உள்ள 8 சிறுவர்களின் நிறை மற்றும் உயரம் குறைந்தது மாதத்திற்கொரு தடவையாவது அந்தப் பிரதேசத்திலுள்ள மகப்பேற்றுத் தாதிகளால் கிரமமாகப் பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க தடுப்பு மருந்து கொள்கையின்ப டி ரூபெல்லாவிற்கான தடுப்பு மருந்து சிறுவர்களிற்குக் கொடுக்கப்பட வேண்டும். ஆனால் மாதிரிகளில் நுகேகொடவிலுள்ள 93 சிறுவர்கள் மற்றும் பொரளை சீடிசீ இலுள்ள 38 சிறுவர்களிற்கு ரூபெல்லா தடுப்பு மருந்தேற்றப்பட்டதற்கான ஆதாரமான சான்றுகள் கிடைத்திருக்கவில்லை. மேலும், நாரஹென்பிட்ட சீடிசீ யிலுள்ள 48 சிறுவர்களில் 19 சிறுவர்களிற்கு ரூபெல்லா தடுப்பூசி ஏற்றியதற்கான சான்றுகள் கிடைத்திருக்கவில்லை. வயது வந்தோருக்கான ஏற்பு மற்றும் டிப்திரியா என்பவற்றிக்காக 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட சகல சிறுவர்களிற்கும் தடுப்பு மருந்து ஏற்றப்பட்டிருக்க வேண்டிய போதிலும் மேற்படி பொரளை சீடிசீ இலுள்ள 38 சிறுவர்களில் 35 சிறுவர்களிற்கு அந்த தடுப்பு மருந்துகள் ஏற்பட்டதற்கான சான்றுகள் எதுவும் இருக்கவில்லை.

(இ) பெயர் வழிக் கோவையிலுள்ள குறிப்புக்களின் படி, ஆர் சீ எஸ், எம்சீஎஸ் மற்றும் வீசீடிசீஎஸ் என்பவற்றிலுள்ள அதிகமான சிறுவர்களிற்கு பின்வரும் காரணங்களால் ஆலோசனை தேவைப்படுகின்றது.

(i) அன்பு மற்றும் கவனிப்பு இன்மை

(ii) அதிகமான சிறுவர்களிற்கு பெற்றோர்கள் அல்லது கிட்டிய உறவினர்கள் எவரும் இல்லாமை.

(iii) கிட்டிய உறவினர்கள் வருகை தருதல் குறைவாக இருந்தமை

(iv) பெற்றோர்களின் நலிந்த சமூக அந்தஸ்து (இந்தச் சிறுவர்களின் அதிகமான பெற்றோர்கள் பிரிந்து வாழ்பவர்களாகவோ அல்லது போதை மருந்து விநியோகிப்பவராக, திருட்டு அல்லது கொலைகளற்ற குற்றங்கள் தொடர்பாக சிறையிலிடப்பட்டவர்களாவர்)

(v) ஆபத்தான தடுப்பு மருந்துகளை உட்கொள்ளுதல் மூலம் சில சிறுவர்கள் தற்கொலைக்கு முயற்சித்தமை அல்லது சீடிசீக்களிலிருந்து தப்பி ஓட முயற்சித்திருந்தமை.

(vi) சீஎஸ்எஸ் களிலுள்ள சகல சிறுவர்களும் பராயமடையாத குற்றவாளிகளாக உள்ளனர். திருடுதல், சண்டையிடுதல், பாலியல் குற்றம் புரிதல் சீடிசீக்களிலிருந்து தப்பிச் செல்லல் போன்றவாறான சட்ட விரோத நடத்தைகளில் ஈடுபடல்.

(ஈ) மாகொல தடுப்பு இல்லம், மாகொல சான்றளிக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் சான்றளிக்கப்பட்ட இல்லங்களிலுள்ள சில சிறுவர்கள் உளவியல் மற்றும் உடலியல் ரீதியாக ஊனமுற்றமை காரணமாக தங்களுடைய சொந்த அலுவல்களைக் கவனிக்க முடியாத அளவில் இருந்ததுடன் அவர்களிற்கு விசேட கண்காணிப்பு வழங்கி சிகிச்சைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. எடுத்துக்காட்டாக இந்த மூன்று நிறுவனங்களிலும் ஒரு ஒருவர்படி அத்தகைய நெருக்கடிக்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) இரன்முத்துக்கல சான்றளிக்கப்பட்ட பாடசாலைகளின் துப்பரவு விசனப்படும் நிலையிலிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2011 ஒக்தோபர் 25 இல் மலசலகூடக் குழி நிரம்பியதிலிருந்து சகிக்க முடியாத துர்நாற்றம் வீசியது. இது சிறுவர்களின் சுகாதாரத்திற்கு பாரதூரமான அச்சுறுத்தலாகும். சமையலறையின் நிலைமை மிகமோசமாக இருந்ததுடன் டிபீசீஎஸ் ஆல் ஒழுங்கான மற்றும் ஆக்கபூர்வமான மேற்பார்வை இன்மையின் விளைவு என்பது அவதானிக்கப்பட்டது.

**தாற்பாரியங்கள்**

i. சிறுவர்களின் உள மற்றும் உடலியல் ரீதியான சுகாதாரம் மேலும் சீரழிவடையும் சாத்தியம்

ii. பிள்ளைகளிற்கு புனர்வாழ்வளிக்கப்பட்டதன் பின்னர் உளவியல் ரிதியாகவும் உடலியல் ரீதியாகவும் சுகாதாரமான நபர்களாக விடுவிக்க இயலாமை

iii. ஒழுங்கான பரிசோதனைகளின்மையால் குழந்தைகளின் முறையான வளர்ச்சியுடன் தொடர்பான முக்கிய தகவல்களை பெற முடியாமை.

iv. சீடீசீ யுடன் இணைந்து முறையான ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்களை நடந்தப்படாமையின் விளைவாக தப்பி ஓடுதல் சிறுவர்களிற்கிடையில் கலகமூட்டல் நடந்த மற்றும் பாலியல் குற்றங்களிற்கு அடிமையாகுதல்.

v. பல்வேறு நோய்களிற்கு உட்படும் அபாயம்.

vi. எதிர் காலத்தில் சிறுவர்கள் தொடர்பாக ஏற்படும் சமூக ரீதியான பிரச்சனைகள் மேலும் சிக்கலடைதல்.

**சிபார்சுகள்**

**i.** சீடிசீஎஸ் களின் சம்பந்தப்பட்ட அதிகாரிளுக்கு சரியான நேரத்தில் தடுப்பு மருந்து கொடுப்பதன் முக்கியத்துவம் பற்றி அறிவூட்ட வேண்டும்.

**ii.** நல்ல சுகாதார பழக்கவழக்கங்கள் பற்றி சிறுவர்களிற்கு கற்பிக்கப்பட வேண்டும்

**iii.** ஒவ்வொரு சிறுவருக்கும் தனிப்பட்ட கவனிப்புச் செலுத்து முகமாக ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் ஒருங்கமைக்கப்பட வேண்டும்.

**iv.** கட்டிடங்கள் உட்பட வளவுகள் முறையாகப் பராமரிக்கப்பட்டு ஒழுங்காக சுத்தமாக்கப் பேணல் வேண்டும்.

**v.** இந்த இல்லங்களிற்காக போதிய எண்ணிக்கையான பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**முகவர் பதில்**

- இந்த அறிக்கையில் காட்டப்பட்ட குறைபாடுகள் படிப்படியாக சீராக்கப்படுவதுடன் உரிய நிறுவனங்களின் தரம் மற்றும் நியமங்களை உயர்த்துவதற்குகான கூடிய படிமுறைகள் எடுக்கப்படும்.

## 3.2 கல்வி

### 3.2.1 பாடசாலைக் கல்வி

(அ) இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன. 2011 நொவம்பர் 3 தொடக்கம் 16 வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி செவ்வையின் மூலம் இரன்முத்துகல சான்றளிக்கப்பட்ட பாடசாலையின் நாளாந்த வேலை ஒதுக்கீட்டுப் பதிவேட்டின் படி சிறுவர்களில் 50 சதவீதம் பாடசாலைக்குச் சமூகமளித்தோ அல்லது தொழில்சார் கல்வியைப் பின்பற்றியோ இருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அவர்களில் சிலா் சமையலறையில் ஈடுபட்டிருந்த அதே நேரம் ஏனையோா் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டோ அல்லது செயலற்றவர்களாகவோ இருந்தனர்.

(ஆ) சிறுவர்களின் சாதாரணதர மற்றும் உயர்தர பரீட்சைகளின் பெறுபேற்று, அறிக்கைகள் மற்றும் அறிக்கைப் பத்திரங்கள், வேலைப் புத்தங்கள் பரீட்சிக்கப்படுகையில் ஒரு வீசீடிசிஎஸ் இல் உள்ள சிறுவர்களைத் தவிர ஏனைய சகல சீடீசீஎஸ் களிலுள்ள சகல சிறுவர்களும் உணவு, மேலதிக பாடப் புத்தகங்கள், சீருடைகள், பைகள் முதலியன போதிய வசதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் கல்வியில திருப்திகரமான நிலை இருக்கவில்லை.

(இ) ஆர்சீஎஸ் மற்றும் எம்பிஎஸ் இன் கல்வி அறிவு அலகுகளின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளின் ஆய்வில் சிறுவர்களின் வருகை ஒழுங்காகவும் குறித்த சில

நேரத்தில் சிறுவர்களின் வருகை இன்மையும் வெளிப்பட்டது. மேலும் சிறுவர்கள் மதிய உணவு அல்லது தேநீருக்கு அனுமதிக்கப்படும் சமயங்களில் அவர்களில் பெரும்பாலானோர் குறித்த நேரத்திற்கு பவருவதில்லை எனவும் பெரும்பாலானோர் முற்றாகவே வகுப்புக்களிற்கு மீளத் திரும்புவதில்லை எனவும் எம்மால் அவதானிக்கப்பட்டது.

(ஈ) பாணந்துறை, வீசீடிசீ மற்றும் நுகேகொடை பிரதேசத்தில் மகளீர் தன்விருப்ப சிறுவர் அபிவிருத்தி இல்லத்தில் எழுத்தறிவில்லாத இரண்டு சிறுவர்களிருந்தனர். எனினும் அச் சிறுவர்களுக்குஎழுத்தறிவை வழங்குவதற்கு எவ்வித நடைமுறையும் இருக்கவில்லை.

(உ) கணக்காய்வுத் திகதியான 2011 நவம்பர் 17 மற்றும் 2011 திசெம்பர் 14 இல் ஆர்சீஎஸ் மற்றும் எம்சீஎஸ் இன் கல்வி அறிவு அலகுகளில் முறையே 16 மாணவர்களும் மற்றும் 9 மாணவர்களும் இருந்தனர். இந்த சிறுவர்களின் வயது மற்றும் அறிவு நிலை வித்தியாசமானதாக இருந்த போதிலும் அந்தச் சிறுவர்களிற்கு தனித்தனியான கவனிப்பு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இந்த சான்றளிக்கப்பட்ட இரண்டு பாடசாலைகளிலும் ஒரு ஆசிரியர் சமூக சேவையில் டிப்ளோமா பெற்றவராக இருந்ததுடன் மற்றைய ஓர் ஆசிரியர் பட்டதாரியாவார். இந்த துறை தொடர்பாக அவர்களுக்கு போதிய வசதிகள் இருந்தபோதிலும் அவர்கள் படிப்பறிவற்ற அல்லது குறைந்த இயலுமை கொண்ட சிறுவர்களிற்கும் கற்பிப்பதற்காகப் பயிற்றப்பட்டிருக்கவில்லை.

(எ) எழுத்தறிவற்ற சிறுவர்களிற்கு கற்பிப்பதற்காக பயிற்சி பெற்றிராத ஆசிரியர்களால் பகுதியளவில் எழுத்தறிவு வகுப்புக்களில் பாடத்திட்டங்களின் உள்ளடக்கம் அல்லது பாட விடயங்களில் தயாரிக்கப்பட்டிருந்தன.

(ஏ) சீடிசீஎஸ்களில் வசிக்கும் மொத்த மாணவர்களில், எம்சீஎஸ் மற்றும் ஆர்சீஎஸ் இல் வசிக்கும் முறையே பன்னிரண்டு பேரும் இருபத்தியொரு சிறுவர்களும் 04 வீசீடிஎஸ் களில் வரும் 19 சிறுவர்களும் அவர்களின் வயதுப் படி கல்வி நிலையை அவர்கள் அடைத்திருக்காமையால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**தாற்பரியங்கள்**

i. அவர்கள் சமூகத்துடன் ஒன்றிணையும் போது வேலை வாய்ப்பைப் பெறுவது சிரமமாக உள்ளது

ii. பகுதியளவில் கல்வியறிவுள்ள சிறுவர்களின் பரம்பரையை உருவாக்குதல்

iii. எதிர்காலத்தில் அரசாங்கத்திற்கு மேலதிக பாரத்தை உருவாக்குதல்

iv. சுமூகத்திற்கு மன நிலை குன்றிய சிறுவர்களை விடுவித்தல்

v. அவர்கள் சமூகத்திற்கு விடுவிக்கப்பட்டதும் சமூகத்திலுள்ள சாதாரண சிறுவர்களுடன் சேர முடியாத நிலை ஏற்படும்

vi. நல்ல பிரசைகளை உருவாக்கும் நோக்கம் எய்தப்படாமை

vii. அரசாங்கத்தால் இந்த நிறுவனங்களைப் பராமரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதிகளிலிருந்து போதிய விளைவு இருக்கவில்லை.

**சிபார்சுகள்**

i. அரசாங்க இல்லங்கள் மற்றும் வீசீடிக்களிலுள்ள பாடசாலை செல்லும் சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக முறையான கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தலும அமுலாக்கலும் வேண்டும்.

ii எம்சீஎஸ் மற்றும் ஆர்சீஎஸ் இலுள்ள பாடசாலை செலலும் சிறுவர்களின் தங்குமிடங்கள் இடையூறுகளின்றி எளிதாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு உதவும் விதத்தில் ஏனைய சிறுவர்களிடத்திலிருந்து புறம்பாக்கப்பட வேண்டும்.

iii அரசாங்க இல்லங்கள் மற்றும் வீசீடிக்களிலுள்ள சிறுவர்களின் கல்வி வெற்றிக்காக கல்வி வசதிகள் தவிர்ந்தவற்றிற்காகவும் சிறுவர்கள் மீதான முறையான மற்றும் ஒழுங்கான மேற்பார்வை வழங்குதல்.

iv. எம்சீஎஸ் மற்றும் ஆர்சீஎஸ் இன் கல்வியறிவு அலகுகளிலுள்ள ஆசிரியர்களிற்காக முறையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட வேண்டும். அதனால் அந்த அலகுகளிலுள்ள சிறுவர்கள் வேறுபட்ட அறிவு நிலைகளிலும் வேறுபட்ட வயதுகளையும் கொண்டவர்களாக இருப்பதால் அவர்களின் கடமைகளை மேலும் காத்திரமான முறையில் ஆற்ற முடியும்.

v. உத்தியோகபூர்வ வழிகளினூடாக அரசாங்க பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கு ஆணையாளர் மற்றும் நன்னடத்தை அலுவலர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

**முகவர் பதில்**

- இந்த அறிக்கையில் காட்டப்பட்ட குறைபாடுகள் படிப்படியாக சீராக்கப்படுவதுடன் உரிய நிறுவனங்களின் தரம் மற்றும் நியமங்களை உயர்த்துவதற்குமான கூடிய படிமுறைகள் எடுக்கப்படும்.

### 3.2.2 தொழிற் பயிற்சி கல்வி

**(அ) மாகொல சான்றுபடுத்திய பாடசாலை**

சீஎஸ் களிலுள்ள சிறுவர்களிற்காக டிபீசீஎஸ் ஆல் ஒழுங்கு செய்யப்பட்ட தொழிற் பயிற்சி பாடநெறிகளின் பரீசீலனையில் தற்போது உலோகத் தொழில், தையல், மின்சாரம், தச்சு வேலை, விவசாயம், கணணி, மேசன் வேலை போன்ற பாடநெறிகளுக்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளடை வெளிப்பட்டது.

ஆசிரியர்கள் சேர்க்கப்படாமை காரணமாக ஒட்டுவேலை, உலோகத்தொழில், வர்ணம் பூசுதல், கடைசல் இயந்திரம், பாடநெறிகள் தற்போது நடாத்தப்படுவதில்லை

இந்தப் பாடசாலையிலுள்ள மேசன் வேலைப் பிரிவு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேசன் வேலைப் பாடநெறியைப் போதிப்பதற்காக எம்சிஎஸ் ஆல் இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் ஒரு ஆசிரியர் மாத்திரமே பாடநெறியை முறையாக நடாத்தியிருந்தார்.

(ii) மேசன் வேலைப் பிரிவில் மாணவர்களின் நலிந்த வரவு காரணமாக ஆசிரியர் உரிய முறையில் வகுப்பை நடாத்த முடியாதிருந்ததுடன் அது பொது மக்கள் பணம் விரயமாவதற்கு வழிவகுத்தது.

(iii) இந்தப் பாடசாலையின் மேசன் வேலைப்பிரிவு மற்றும் மின்சாரப் பிரிவின் கூரைகளிலிருந்து மழை நீரொழுக்கு அவதானிக்கப்பட்டன. அதனால் பாடநெறிகளை நடாத்துவதற்கான அடிப்படை வசதிகள் இருக்கவில்லை.



**எம்சீஎஸ் கல் கட்டிட பிரிவில் சேதமடைந்த கூரை**



**எம்சீஎஸ் இல் ஒழுங்கற்ற பகுதி**

இப் பாடசாலையிலுள்ள மின்சாரப் பிரிவின் வளங்களின் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன.

இப் பாடசாலையின் எம்சீஎஸ் இல் மின்சாரப் பிரிவின் பாட நெறிகள் ஆசிரியர் மற்றும் மாணவர்களின் உற்சாகமான பங்கேற்புடன் வெற்றிகரமாக

நடாத்தப்படுகின்ற போதிலும் பாடநெறிகளிற்குத் தேவைப்படுத்தப்பட்ட தரப்பொருட்கள் நேர காலத்தில் வழங்கப்பட்டிருக்கவில்லை. மழை காலங்களில் பிரிவின் கூரையிலிருந்து மழை நீரொழுக்குகள் அவதானிக்கப்பட்டன.



எம்சீஎஸ் இன் மின்சாரப் பிரிவு

**(ஆ) இரன்முத்துகல சான்றளிக்கப்பட்ட பாடசாலை**

**விபரங்கள் பின்வருமாறு**

(i) ஆர்சீஎஸ் இன் மனையியல் பாடநெறி தேவையான சில உபகரணங்கள் இல்லாத போதிலும் ஆசிரியர் மற்றும் சிறுவர்களின் உற்சாகமான பங்கேற்புடன் நடாத்தப்பட்டது.

(ii) சிறுவர்கள் காலை மற்றும் மாலை என்றவாறு இரு நேரங்களில் வகுப்புக்களிற்கு ஒதுக்கப்பட்டனர். அதே நேரம் சில சிறுவர்கள் பல்வேறு பயிற்சி பாட நெறிகளிற்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்ததுடன் மேற்பார்வை இன்மையால் சிறுவர்களின் நலிந்த வரவிற்கு வழிகோலியது. சிறுவர்கள் முறையாக ஒதுக்கப்பட்டும் அவர்கள் பாடநெறிகளில் ஒழுங்காகப் பங்கேற்பதற்கும் உற்சாகமளிக்கப்பட்டிருந்தால் நடாத்தப்பட்ட பாடநெறிகளிலிருந்து பூரணத்துவமான அறிவைவைப் பெற்றிருக்க முடியும்

(iii) அரசாங்க நிலையங்களில் நிறுவனமயப்படுத்தப்பட்ட மற்றும் பாடசாலைக் கல்வியறிவைப் பெற்றிருக்காத சிறுவர்களிற்கு தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சி வழங்கப்படுகின்றது. இரன்முத்துகல சான்றளிக்கப்பட்ட பாடசாலையில் நடாத்தப்பட்ட தொழில்சார் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் முறையாக திட்டமிடப்பட்டிருக்கவில்லை. ஜூகி இயந்திர மற்றும் விவசாய பாடநெறிகள் ஒவ்வொரு நாளும் முழு நேர அடிப்படையில் நடாத்தப்படுகின்றது. முழு நேர பாடநெறிகளிற்கு தெரிவு செய்யப்பட்ட சில மாணவர்கள் ஏனைய பகுதிநேரப் பாடநெறிகளான அழகியல் கற்கை, பாடநெறிகளிற்கும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். ஆகையினால் இரன்முத்துகல சான்றளிக்கப்பட்ட பாடசாலைகளிலுள்ள சிறுவர்கள்

எவராலும் முழு நேரப் பாடநெறிகளையோ அல்லது பகுதி நேரப் பாடநெறிகளையோ முறையாகப் பூரணப்படுத்த முடியாதிருந்தது. இந்த நிலைமை காரணமாக பாடநெறிகள் பூரணப்படுத்தப்பட்டதை அடுத்து வழங்கப்படும் சான்றிதழ்கள் பின்னர் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) இரன்முத்துகல சான்றளிக்கப்பட்ட பாடசாலைகளின் போதனாசிரியர்களால் வேண்டப்பட்ட ஜூகி சிகை அலங்காரம், அழகுபடுத்தல், மனையியல் பாடநெறிகளை நடாத்துவதற்காக வேண்டப்பட்ட விடயங்கள் / பொருட்கள் கணக்காய்வுத் திகதியான 2011 நவம்பர் 17 வரையிலும் எவ்வித இடையூறுகளுமின்றி பாடநெறிகளை நடாத்துவதற்கு இயலக் கூடியவாறு டிபீசீஎஸ் ஆல் வழங்கப்பட்டிருக்கவில்லை.
ஆர்சீஎஸ் இன் விவசாயப் பிரிவு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) போதனாசிரியரின் படி, பாடத்திட்டம் மிகவும் பரந்தளவிலானதெனவும் சிறுவர்களின் அறிவு நிலைக்கு அப்பாற்பட்டதாகும். ஆகையால் அதை வெற்றிகரமாக நடாத்துவதற்கு முடியாதுள்ளது.

(ii) சிறுவர்களின் தரத்திற்குப் பொருந்தக் கூடிய விதத்தில் பாடத்திட்டம் மாற்றப்பட்டுள்ள 2011 நவம்பர் 17 அன்று ஆய்விற்காக நிறுவகத்திற்கு சென்ற போது சிறுவர்கள் தோட்டததை சுத்திகரித்தும் அல்லது தென்னம் விகைளை நடுவதற்காக கிடங்குகளை கிண்டியதுடன் சிறுவர்களால் சில் தென்னம் விதைகள் சேதமாக்கப்பட்டிருந்தது. 2011 நவம்பர் 17 அன்றைய கணக்காய்வின் போது மேலதிக விகைள் இருந்த போதிலும் சேதமாக்கப்பட்ட விதைகளை பரிமாற்றத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. உரப் பசளை 5 ஆண்டுகளிற்குமேலாக வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் பிரகாரம் மாணவர்களின் முயற்சி வெற்றியளித்திருக்கவில்லை.

(iii) போதனாசிரியர் 13 ஆண்டுகளாக இந்த பாடசாலையில் சேவையிலிருந்த போதிலும் நிலச் சமப்படுத்தல்கள், பயிர்செய்கை முதலிய ஆரம்ப நடவடிக்கைகள் திருப்திகரமாக செயற்பட்டிருக்கவில்லை.

(iv) விவசாய அறை மற்றும் ஏணி என்பவற்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 58,592 பெறுமதியான மூலப் பொருட்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படாது விளைவற்றறு காணப்பட்டன. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் குறித்த நோக்கத்திற்குப் பொருத்தமானதல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

**(இ) தன்னார்வ சிறுவர் நலன் அபிவிருத்தி நிலையங்கள்**

- சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளிற்குத் தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்திருக்கும் வயது வந்த சிறுவர்களிற்காக சிறந்த சமயற்கலையையும், தையற்கலை பாடநெறிகளையும் நாரஹென்பிட்டியிலுள்ள வீசீடிசீயில் நடாத்தப்பட்டிருந்ததை நாங்கள் அவதானித்தோம். சிறுவர்களின் நன்மைக்காக சீடிசீ இல் எடுக்கப்பட்ட ஒரு முயற்சி பாரட்டத்தக்கதாகும்.

  நுகேகொடையிலுள்ள ஒரு வீசீடிசீ பாடசாலை செல்லும் மற்றும் பாடசாலை செல்லாத சிறுவர்களிற்காக தையற்கலை மற்றும் பின்னல் பாட நெறியை நடாத்தியது இந்த சீடீசீ, சீடிசீ க்கு மேலதிகமாக ஒரு வீர் நிறுவனமாக பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த நிறுவகத்தால் நடாத்தப்பட்ட தையல் மற்றும் வர்ணம் பூசும் பாடநெறிகள் பின்வரும் காரணிகளால் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டு கட்டுப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

  i. சிறுவர்களின் நலிந்த வருகை (பெரும்பாலான நேரங்களில் சிறுவர்கள் சீடிசீ வளாகத்தில் வீணே இருந்தனர்)
  ii. பாடநெறிக்கான பொருட்கள் இன்மை (நூல் துணி முதலியன)
  iii. முறையான மேற்பார்வை இன்மை
  iv. பாடநெறிக்கான பாடத்திட்டம் இன்மை
  v. பாடநெறிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்த சிறுவர்களிற்கு சான்றிதழ் வழங்கப்படாமை
  vi. சிறுவர்களின் பெறப்படும் பயிற்சியின் நிலையை மதிப்பீடு செய்வதற்கு பாடநெறிகளிற்கான முறையான முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டு முறைமை இல்லாமை.

**தாற்பரியங்கள்**

(i) பாடநெறிகளிற்கான ஏனைய தேவைப்பாடுகளிற்கு தேவையான மூலப்பொருட்கள் வழங்கல் மற்றும் செயன்முறை பயிற்சி தாமதம் காரணமாக நடத்தமுடியாமை

(ii) பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் முறையற்ற தயாரிப்பின் விளைவாக நோக்கங்களை அடைய முடியாதிருந்தமை.

(iii) முறையற்ற நிகழ்ச்சி திட்டமிடல் மற்றும் வினைத்திறன் அற்ற முகாமைத்துவம் போன்ற காரணங்களால் பயிற்சி ஆக்கபூர்வமான

முறையிலமைந்திருக்காமையால் சிறுவர்கள் பாடநெறிகளதெனையும் பூர்த்தி செய்ய முடியவில்லை.

(iv) விவசாய கூட்டத்திற்கான செலவினம் அதற்கான தேவைப்பாடு மற்றும் அதிலிருந்து உருவாக்கப்படும் நன்மைகளெதனையும் முன்கூட்டியே மதிப்பிடப்பட்டிராமையால் பயனற்றதாகி உள்ளது.

(v) சிறுவர்களின் வயதின்படி வகுப்பு / தரத்திற்கான நியம தரத்தின் கீழ் அவர்களின் வாசிப்பு மற்றும் எழுத்தாற்றல் குறைவாக இருந்தமையால் பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களால் பாடசாலைக்குச் செல்ல முடியாதிருந்தது. ஆகவே, சுவர்கள் குறித்த வகுப்புக்களுக்கு அதிபர்களால் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

**சிபாரிசுகள்**

(i) சான்றளிக்கப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் தொழிற்பயிற்சியில் ஒவ்வொரு சிறுவனும் பங்கு பற்றும் சந்தர்ப்பத்தை பெறும் வகையில் நேர அட்டவணையை தயாரிக்க வேண்டும்.

(ii) நிலையங்களால் சிறுவர்களிற்கு வழங்கப்பட்ட முறைசார கல்விக்கு தேவைப்பட்ட பொருட்கள் முழுமையாகவும் நேரகாலத்துடனும் வழங்கப்பட வேண்டும்.

(ii) வேலைகள் அல்லது செயற்திட்டங்களிற்கான பொருட்களின் கொள்வனவு அத்தகைய வேலைகள் அல்லது செயற்திட்டங்களின் தேவையை மதிப்பீடு செய்ததன் பின்னர் பொருட்களின் தரம், அளவு மற்றும் வகை தகுதி வாய்ந்த ஒருவரினால் நிர்ணயிக்கபட்டதை அடுத்தே மேற்கொள்ளப்பட வேண்டும். வளங்களை வழங்குதலில் கொள்வனவு நடைமுறைகளுடன் இணங்க வேண்டும்.

(iv) சிறுவர்கள் பட்டோலையின் படி காலை அல்லது மாலை நேர வகுப்பாக இரண்டு தொகுதிகளிற்கும் முறையாக ஒதுக்கப்பட வேண்டும்.

(v) சிறுவர்கள் வருகையை உறுதிப்படுத்துவதற்கு முறையான மேற்பார்வை பேணப்பட வேண்டும்.

(vi) சகல பாடநெறிகளிற்குமான பொருத்தமான மதிப்பீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டியதுடன் பாடநெறிகளை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தவர்களிற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட வேண்டும்.

(vii) எம்சீஎஸ் இன் மேசன் வேலை மற்றும் மின்சாரப் பிரிவுகள் அவர்களின் வேலையை பாதுகாப்பாக செய்வதற்கு இயலக் கூடியவாறு விரைவில் திருத்தப்பட வேண்டும்.

(viii) நாளாந்தம் செய்யப்பட்ட கற்பித்தல் வேலையின் உள்ளடக்கத்தை ஆசிரியர்கள் பதிவு செய்வதற்காக நாளாந்த பதிவேடு பேணும் முறைமை ஆசிரியர்களிற்கு அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு சிறுவனும் தொழிற் பயிற்சி நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அதன் மூலம் அவர்கள் ஏனையோரில் தங்கியிருக்காகு தமது வாழ்க்கையை தொடர்ந்து கொண்டு நடாத்த முடிவதுடன் அது அவர்களை சமுகத்தின் நற்பிரசையாக்குகின்றது.

(x) தன்னார்வ சீடிசீ இல் முறைசார கல்வி ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். சிறுவர்களுக்கு அங்கு தங்கியுள்ள காலப்பகுதியில் முறைசார் அல்லது முறைசாராக் கல்வி வழங்கப்பட்டால் அவர்கள் தமது கல்வியை முன்னேற்றுவதற்கு எதுவாக இருக்கும்.

**முகவர் பதில்**

- இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் படிப்படியாக சீராக்கப்படுவதுடன் உரிய நிறுவனங்களின் தரம் மற்றும் நியமங்களை உயர்த்துவதற்கு மேற்கொண்டு படிமுறைகள் எடுக்கப்படும்.

## 3.3 பாதுகாத்தல் மற்றும் நலனோம்புகை

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பின்வரும் பிரச்சினைக்குரிய நிலைமைகளிற்கு வழிவகுக்கும் அரசாங்க சீஎஸ் கள், ஆர்எச் கள் மற்றும் வீசீடிசீ க்கள் என்பவற்றிலுள்ள சிறுவர்கள் தொடர்பாக டிபீசீஎஸ் இல் மத்திய தரவு அடிப்படை முறை எதுவும் இருக்கவில்லை. அது பின்வரும் பிரச்சினையான நிலைமைக்கு வழிவகுக்கிறது.

(i) ஒரு தேவை உருவாகின்ற போது உடனடியாக சீடிசீக்களிலுள்ள சிறுவர்களின் வதிவிடத்திற்கான இடத்தை இனங்காண்பதற்கான தகவல் இல்லாமை

(ii) டிபீசீசீஎஸ் இன் கட்டுக்காவல் கவனிப்பு மற்றும் மேற்பார்வை என்பவற்றின் கீழ் சீடிசீக்களில் வதியும் சிறுவர்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்துவதற்கு முடியாமை

(iii) ஆர்சீஎஸ் மற்றும் எம்சீஎஸ் இன் அனுமதி மற்றும் வெளியகற்றும் பதிவேடுகள் மற்றும் வரவுப் பதிவேடுகளின் பரிசீலனையின் போது சிறைச்சாலைகள் திணைக்களத்தால் நீதிமன்றங்களில் ஆஜராக்குவதற்காக அனுமதி பெற்ற பின்னர் 2011 இல் ஆர்சீஎஸ் இன் 06 சிறுவர்கள் தொடர்பாகவும் 2010 இல் எம்சீஎஸ் இன் 10 சிறுவர்கள் தொடர்பாகவும் அறிவித்தல் அல்லது குறிப்புக்களெதுவும் இருக்கவில்லை என்பது வெளிப்பட்டது. இது சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் டிபீசீசீஎஸ் அதற்கிடையில் பொருத்தமான தொடர்பாடல் முறைமை இன்மை காரணமாக இல்லாது இடம்பெற்றுள்ளது.

(iv) 01 மாதம் தொடக்கம் 5 ஆண்டுகள் வயது வரையான சிறுவர்களை கவனிப்பதற்காக பதிவு செய்யப்பட்ட வீசீடிசீ இன் அனுமதி மற்றும் வெளியேற்றும் பதிவேடுகளின் பரிசீலனையில் 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் சம்பந்தப்பட்ட இல்லங்களிலிருந்து 07 சிறுவர்கள் மாற்றப்பட்ட நிறுவகங்கள் தொடர்பாக போதிய தகவல்கள் இருக்கவில்லை.

(ஆ) சீடிசீயிலுள்ள அநேகமான சிறுவர்கள் பெற்றோரில் ஒருவர் வெளிநாட்டில் அல்லது சிறையில் அல்லது இரண்டாவது திருமணம் செய்தமை அல்லது பிரிந்திருந்தமை போன்றவற்றால் ஏழைக் குடும்பங்களிலிருந்து பாதுகாப்பிற்காக வந்தவர்களாக இருந்தனர். துஷ்பிரயோகத்திற்குள்ளாகிய சிறுவர்களும் கூட அதே சீடிசீக்கு அனுப்பபிவைக்கப்பட்டிருந்தனர். இந்த இரண்டு வகையான சிறுவர்களும் வேறுபட்ட பின்னணியைக் கொண்டவர்களாக இருப்படதால் தமது துரதிஷ்ட அனுபவத்தைச் கூறுவதன் மூலம் துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர்கள் ஏனைய சிறுவர்களை சீரழிப்பதற்கான சீடிசீ யிலுள்ள துஷ்பிரயோகத்திற்குள்ளான மற்றும் கைவிடப்பட்ட சிறுவர்களின் கலப்பு விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது. சிறுவர்கள் வயது வந்தவர்களின் வயதான 18 வயதை அடைவதற்கு முன்னரே எதிர்ப்பாலாருடன் சட்டவிரோத உறவுகளை மேற்கொள்வதன் மூலமே பராயமடையாத குற்றவாளிகளாக வருகின்றனர். துஸ்பியோகத்திற்குள்ளான மற்றும் கைவிட்ட சிறுவர்களின் கலப்பின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| சீடிசீயின் பெயர் | சீடிசீயிலுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை | ஆதரவற்ற சிறுவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | துஷ்பிரயோகித் திற்குட்பட்டோர் | கைவிடப்பட்டோர் |
| நாராஹேன்பிட்டியவில் உள்ள ஒரு சீடிசீ | 34 | 01 | 33 |
| களனியிலுள்ள ஒரு சீடிசீ | 24 | 01 | 23 |
| மகரகமவிலுள்ள ஒரு சீடிசீ | 72 | 02 | 70 |
| பாணந்துறையிலுள்ள ஒரு சீடிசீ | 28 | 03 | 25 |
| களுத்துறையிலுள்ள ஒரு சீடிசீ | 48 | 07 | 41 |
| நுகேகொடையிலுள்ள ஒரு சீடிசீ | 150 | 07 | 143 |

(இ) 2009, 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் ஆர்சீஎஸ் எம்ஆர்எச், எம்சிஎஸ் இற்கு அனுப்பப்பட்ட முறையே 43, 41 மற்றும் 58 பராயமடையாத குற்றவாளிகள் பாதுகாப்பின்மையால் அதிலிருந்து தப்பி ஓடியதுடன் பின்னர் அவர்கள் அவர்களின் பெற்றோர்/ உறவினர் இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டனர்.

(ஈ) நன்னடத்தை மற்றும் சிறுவர் நலன் சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் படி, 02 ஆண்டு வயதிற்குச் கீழுள்ள மற்றும் 02 – 06 ஆண்டுகள் வரையுள்ள வயது கொண்ட ஐந்து சிறுவர்கள் கொண்டதும் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு செவிலித்தாய் / மேற்பார்வையாளர் இருக்க வேண்டும். 06 ஆண்டுகளிற்கு மேற்பட்ட வயதைக் கொண்ட 25 சிறுவர்கள் கொண்டதுமான எங்களால் அவதானிக்கப்பட்டவாறு ஒவ்வொரு அரசாங்க மற்றும் தன்னார்வ சிடிசீயில் உள்ள செவிலித்தாய்மார் மேற்பார்வையாளர்களின் எண்ணிக்கை அவர்களின் வேலைச் சுழற்சியின் படி ஒவ்வொரு சீடிசீ யிலும் வதியும் சிறுவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது போதாமலிருந்தது.

(உ) பெற்றார் / பாதுகாவலரை முறையாக இனங்காணாது தன்னார்வ சீடிசீகளிலிருந்து சிறுவர்களைச் கூட்டிச் செல்வதற்கான அனுமதிக் கடிதங்களை நன்னடத்தை அலுவலர்கள் வழங்கியிருந்தனர்.

(ஊ) ஆர்ஆர்எச், எம்ஆர்எச், எம்சீஎஸ், ஆர்சீஎஸ் மற்றும் வீசீடிசீ களிலுள்ள சிறுவர்களிற்காக மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒழுங்குகள் தொடர்பாக நடாத்திய பௌதீக பரிசீலனை நேரத்தில் பின்வரும் சந்தர்ப்பங்கள் சிறுவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கத்தக்கதென அவதானிக்கபட்டது.

**(i) ஆர்ஆர்எச்**

இந்த விடுதியின் மின்சார முறைமை மற்றும் கட்டிடத்தின் சில இடங்கள் மிகவும் பாதுகாப்பின்றி இருந்தன.



ஆர்ஆர்எச் இல் பாதுகாப்பற்ற மின்சார முறைமை



ஆர்ஆர்எச் இல் பாதுகாப்பற்ற உணவுக் களஞ்சியம்

(ii) **ஆர்சீஎஸ்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- ஆர்சீஎஸ் இலுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை எப்போதும் 50 இற்கு அதிகமாக இருந்த போதிலும், ஒரு பாதுகாவலர் இல்லாத நேரத்தில் கூட அநேகமான நேரங்களில் சிறுவர்கள் ஒரு செவிலித் தாயாருடன் மட்டுமே இருக்க வேண்டியதாயிருந்தது.

- நில மட்டத்திலிருந்து சுமார் 50 அடி உயரமுள்ள நீர்த்தாங்கியின் தூணில் இரண்டு சிறுமிகள் ஏறியிருந்தனர்.

- ஆர்சீஎஸ் இன் பழைய கட்டிடத்தின் சுற்றாடலில் பாவனைக்குதவாதென கழித்து விடப்பட்ட உடைந்த கட்டில்கள், கதிரைகள் மற்றும் அலுமாரிகளின் தொகுதி குவிந்திருந்ததுடன் இது பாதிப்பை ஏற்படுத்தும் பிராணிகள் உருவாகும் இடமாக இருக்கக்கூடும்.



ஆர்சீஎஸ் இல் உடைந்த தளபாடங்கள்



ஆர்சீஎஸ் இல் உடைந்த தளபாடங்கள்

**(iii) எம்சீஎஸ்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2011 நவம்பர் 02 ஆம் திகதிய கணக்காய்வின் போது சமையலறையிலிருந்து ஒரு சிறுவன் மேல் மூடியில்லாத பிளக்குடன் கூடியதும் கவசமிடப்படாத முனைகளுள்ள மின்சார வயர்களுள்ளதுமான பாரிய கொதிகலனில் தேநீருக்காக நீரைக் கொதிக்கச் செய்து கொண்டிருந்தததை அவதானித்தோம்.




**மாகொல சான்றளிக்கப்பட்ட பாடசாலையில் பாதுகாப்பற்ற மின்சார முறைமை**



**மாகொல சான்றளிக்கப்பட்ட பாடசாலையில் பாதுகாப்பற்ற மலசலக்கூடக் குழி**

**(iv) வீசீடிசீ கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 6 – 17 ஆண்டுகள் வரை வீச்செல்லை கொண்ட வயதுள்ள 40 சிறுவர்களை எப்போதும் பராமரிக்கும் பாணந்துறைப்பகுதியிலுள்ள ஒரு வீசீடிசீ அதன் தோட்டத்தில் பாதுகாப்பற்ற கிணறைக் கொண்டுள்ளது.

- அந்த இல்லத்தின் இல்லத் தலைவி சிறுவர்கள் விளையாடும் போது அந்தக் கிணற்றில் இறங்கி தமது உடுப்புக்களைக் கழுவுவதாகக் கூறினார். அந்தக் கிணறு ஒரேயளவு ஆழமுடையதுடன் பாதுகாக்கப்படாவிட்டால் விபத்துக்களிற்கான சாத்தியத்தை நிராகரிக்க முடியாது. சிறுவர்களைக் கட்டுப்படுத்துவது சிரமமாகும்.

- இதே சீடிசீயில் கழித்து விடப்பட்ட பழைய தும்பு மெத்தைகளின் தொகுதி களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. முறையாக அவை அகற்றப்படாமல் அபாயம் ஏற்படலாம்.

- பெப்பிலியானவிலுள்ள இரண்டு சீடிசீகள் மற்றும் மொறட்டுவையிலுள்ள இன்னொரு சீடிசீ என்பவற்றைத் தவிர ஏனைய சீடிசீக்களில் கணக்காய்வு

நேரத்தில் 40 பெண்பிள்ளைகளிற்கு மேலாக இருந்த போதிலும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களெவரும் இருக்கவில்லை.

- இரண்டு சீடிசீ க்களைத் தவிர ஏனைய சகல சீடிசீக்களும் சிறுவர்களின் பாதுகாப்பிற்காக தமது வளவுகளில் தீயணைப்பு சாதனங்களைப் பொருத்தியிருந்தனர்.

(எ) மேல் மாகாணத்தில் அமைந்துள்ள இருபத்து நான்கு வீசீடிசீ க்கள் கணக்காய்வுத் திகதியான 2011 நொவம்பர் 02 வரை 2008 இன் 01 ஆம் இலக்க சிறுவர் அபிவிருத்தி நிலைய கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

